இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,510 — JUNE 28, 1912.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 668, N. P.**—1912 ம் ஆண்டு ஆவணிமீ 6 ந் திகதி, 11 மணியளவில், தன் ஆபிசில், வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவு பண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது உரித்துமுடிவுபண்ணப்படும். 4 காணித் துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் பச்சிலைப்பளிப் பகுதியி லிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | ஏக்கரொன்றின் பாணிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 3,907. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 715 | சங்கத்தாவயல் | ரி. பொன்னையா | தென்னம்பிள்ளைக்குத்தக்க | 3 1 24 | 17 |
| | | பிளான் இலக்கம் 3,929. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 889 | ஷை | ஜேகொப் தொம்சன் பாதிரியார் | தென்னம்பிள்ளைக்குத்தக்க | 112 3 38 | 21* |
| 890 | ஷை | றோட்டுக்கு விடப்பட்ட நிலம் | காடு | 1 3 6 | —. |
| | | பிளான் இலக்கம் 3,909. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 718 | புலோப்பளை | எம். சந்தியா | தென்னம்பிள்ளைக்குத்தக்க | 11 2 35 | 26·50 |

* இந்தக் கண்டம் ஆனையிறவுவாடியிலிருந்து வடக்குப்புரமாக இரண்டு கட்டை தூரத்திலிருக்கிறது.

இந்தக் காணிகளின் மேலதிக விபரங்கள் வடமாகாண கவுண்மேந்து ஏசன்றுத்துரையவர்களிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரை அவர்களிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1912 ம் வரு ஜூன்மீ 20 ந் திகதி.

ஹியு கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிறத்தார்.

---

**No. 1,315, E. P.**—1912 ம் ஆண்டு ஆடிமீ 30 ந் திகதி, செவ்வாய்க்கிழமை பிற்பல் 1 மணிக்கு கிழக்கு மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றன.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | படம் 4,360. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 926 | ஒட்டைமாவடி | ஈ. ஆதம்லெவ்வை | காடு | 0 2 22 | 16 |
| 927 | ஷை | அ. தம்பி சாய்பு | காடு | 2 0 18 | 16 |
| 928 | ஷை | ஷை | காடு | 0 3 23 | 16 |
| | | படம் 4,333. றூகம்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 841 | றூகம் | ஆ. காசின்வாவா | சேனை | 2 1 2 | 17·50 |
| 842 | றூகம் | இ. முகையதீன்வாவா | சேனை | 2 1 11 | 17·50 |
| 843 | றூகம் | இ. பிச்சைக்கண்டு | சேனை | 1 1 24 | 17·50 |
| 844 | றூகம் | பை. சின்னத்தம்பி | சேனை | 2 1 22 | 17·50 |
| 845 | றூகம் | மீ. பிச்சைத்தம்பி | சேனை | 1 2 8 | 17·50 |
| | | படம் 4,405. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 1132 | றூகம் | அ. முத்துசாமி | காடு | 2 2 10 | 18 |
| 1133 | றூகம் | றோட்டுக்காக விடப்பட்ட பூமி | காடு | 0 1 22 | — |
| 1134 | றூகம் | அ. முத்துசாமி | சேனை | 3 0 33 | 18 |
| 1135 | றூகம் | றோட்டுக்காக விடப்பட்ட பூமி | சேனை | 0 1 13 | — |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடம் வினாவி யறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1912 ம் வரு ஜூன்மீ 13 ந் உ.

ஹியு கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

# LAND ACQUISITION NOTICES.

**அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.**

[Kabagomuwa, Kegalla District.]

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஆசுப்பத்திரி கட்டுதற் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 2,211. குறிச்சி—கபகொமுவை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| N 15 | யட்டதேரியதோட்டம் .. | தேயிலை தவ்வர் .. | யட்டதேரிய தேயிலை தவ்வர் தோட்டம்... | 5 2 15·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ம் ஸு ஆடிமாசம் 27 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு கேகாலை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி, எச். டபிள்யு. கொட்லிங்றன்,
1912 ம் ஸு ஆனிமீ 17 ந் உ. உதவி அரசாட்சி ஏசன்று.

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

**உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.**

[Hambantota Notice No. 4,448.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஸு (ஜுன்) ஆனிமீ 28 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் விறெடிறிக் ஹுவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில், முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

விறெடிறிக் ஹுவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக் மாகம்பத்துவில் குருந்தான என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 4,303.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| I 475 .. | மியங்வள (நீர்க்குளி) .. .. .. .. | 0 0 2 |

எல்லைகளாவன : வடக்கும் கிழக்கும்-முடியால் உருத்தாடும் பள்ளேகுருந்தனவெல்கடுவ; தெற்கு-லந்தேஜுலான கிராம எல்லை ; மேற்கு-முடியால் உருத்தாடும் பள்ளேகுருந்தானவெல்கடுவ.

II.—பிரதம படம் 4,303.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| H 475 .. | பள்ளேகுருந்தானேவெல்கடுவ .. .. .. | 0 0 26 |

எல்லைகளாவன : வடக்கும் கிழக்கும் முடியால் உருத்தாடும் பள்ளேகுருந்தானவெல்கடுவ ; தெற்கு-லந்தேஜுலான கிராம எல்லை ; மேற்கு-முடியால் உருத்தாடும் பள்ளேகுருந்தானவெல்கடுவ.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 583—584 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[Hambantota S. O. 27—1912.]

[Hambantota Notice No. 4,449.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஸு (ஜுன்) ஆனிமீ 28 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் சீ. வீ. பிறெயின்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் ஏன்பதை அறிந்துகொள்க.

சீ. வீ. பிறெயின்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக் கிருவாப்பத்து மேற்கில் கில்லகேஅயின என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 44c .. | கிரிமெற்றிவாலகாவகேன .. .. .. .. | 0 3 10 |

* இங்கிலிசின் நான்காம் பாகம் 584—587 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கு-கருணையக்க கன்காணமகே பபாகாமி உருத்தாடும் கோன்காவத்தேகெல்லே, முடியால் விற்கப்பட்ட கிரிமெற்றிவலகாவகேன்; கிழக்கு-முடியாவுருத்தாடும் கிரிமெற்றிவாலகாவகேன; தெற்கு-வழிப்பாதை; மேற்கு-முடியாவுருத்தாடும் மெக்கிலியககாகேன.

II.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 76 | காலுகசறேகேன | 3 0 23 |
| 89a | ஷை | 0 2 26 |
| | | 3 3 9 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-குடகலாற கிராம எல்லை; தெற்கு-முடியாவுருத்தாடும் கலுகஸ்ஆற, முடியாவுருத்தாடும் கலுகஸ்ஆறேகேன, (கலுகஸ்ஆற); மேற்கு-வழிப்பாதை, முடியாவுருத்தாடும் கலுகஸ்ஆறேகேன.

III.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 93 | சேருககவத்த | 1 0 32 |
| 93a | ஷை | 0 0 4 |
| | | 1 0 36 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும் தெற்கும்-முடியாவுருத்தாடும் சேருககாகேன; மேற்கு-வழிப்பாதை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குள்ளடங்கிய கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டு இந்த அறிவித்தலில் னின்று நீக்கப்பட்டிருக்கிற தென்பதையும், அதின் விசாலத் தொகையாகும் 1 றூட்டு 4 பேட்சும் முன்குறித்த 1 ஏக்கர் 36 பேட்சுக்கு ளடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 93b | சேருககாவத்த | 0 1 4 |

IV.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 52 | கினிகலாறேகேனகொறடுவ | 0 2 1 |

எல்லைகளாவன: வடக்கு-முடியாவுருத்தாடும் கினிகலாறேகேன; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட கினிகலாறடெனிய, (251,544 ம் உரிமைப்படத்தில் காணும் காணி); தெற்கு-கல்பொத்தேயாய கிராம எல்லை; மேற்கு-முடியாவுருத்தாடும் கினிகல்ஆறேகேன.

V.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப |
|---|---|---|
| 54 | கினிகலாறேகேன | 0 0 31 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-முடியாவுருத்தாடும் கினிகலாறேகேன; தெற்கு-251,544 ம் உரிமைப்படத்தில் காணும் காணி; மேற்கு-முடியாவுருத்தாடும் கினிகலாறேகேன.

VI.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 73 | கலகாவகொறட்டுவ அல்லது சேருககாவத்த | 0 2 12 |

எல்லைகளாவன: வடக்கு-வழிப்பாதை; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட கலகாவகொறட்டுவ அல்லது சேருகசாவத்த (279,579 ம் உரிமைப்படத்தில் காணும் காணி); தெற்கும் மேற்கும்-முடியாவுருத்தாடும் சேருககாகேன.

VII.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 75 | கலகாவகொறட்டுவ அல்லது சேருககாவத்த | 1 0 5 |

எல்லைகளாவன: வடக்கு-வழிப்பாதை; கிழக்கு-முடியாவுருத்தாடும் குடகல்கொடகேன; தெற்கு-முடியாவுருத்தாடும் போககாகேன, முடியாவுருத்தாடும் குடகல்கொடகேன; மேற்கு-279,579 ம் உரிமைப்படத்தில் காணும் காணி.

VIII.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 24p | பாலயவத்தேகேன | 0 3 10 |

எல்லைகளாவன: வடக்கு-முடியாவுருத்தாடும் றட்டக்காறுப்ப; கிழக்கு-முடியாவுருத்தாடும் றட்டக்காறுப்ப, றனவீரக்மகே சபேகாமியாவுருத்தாடும் வெலிக்கடேவத்த; தெற்கு-வழிப்பாதை; மேற்கு-கொடிகாரகே டிஸ்ஸான் காமியாவுருத்தாடும் லோலுககாவத்த.

IX.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 40h | புஞ்சிகொடகேன | 0 0 36 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும் தெற்கும் மேற்கும்-முடியாவுருத்தாடும் புஞ்சிகொடகேன.

X.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 85 | புறுத்தககாவத்த | 0 0 32 |

எல்லைகளாவன: வடக்கு-முடியாவுருத்தாடும் வல்ஜூல்ககாகொட; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட புறுத்தககாவத்த (193,174 ம் உரிமைப்படத்தில் காணும் காணி); தெற்கு-முடியாவுருத்தாடும் கனத்தேவத்தேகேன; மேற்கு-(267,768 ம் உரிமைப்படத்தில் காணும் காணி).

XI.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 60 | விந்தகாவவத்த | 0 1 13 |

எல்லைகளாவன: வடக்கு-254,686 ம் உரிமைப்படத்தில் காணும் காணி; கிழக்கும் தெற்கும் முடியாவுருத்தாடும் விண்டகாவகேன; மேற்கு-முடியாவுருத்தாடும் விண்டகாவகேன, 254,686 ம் உரிமைப்படத்தில் காணும் காணி.

XII.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 67*a* | டேகன்டேவத்த | 0 2 0 |

எல்லைகளாவன: வடக்கு-விசயசிங் டொன் கொஸானின் உரிமைக்காரரா லுருத்தாடும் டன்ககாவத்த, முடியா லுருத்தாடும் டேகன்டேகேன; கிழக்கு-முடியா லுருத்தாடும் குடக்ல்கொடகேன; தெற்கு-விசயசிங்க டொன் அந்திரிசும் மற்றவர்களும் உருத்தாடும் கெற்றகலகாவதத; மேற்கு-முடியால் உருத்தாடும் டங்ககாவத்த.

XIII.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 98 | கலுகசாற | 0 0 29 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உருத்தாடும் கலுகசாறேகேன, முடியால் விற்கப்பட்ட ஆற; கிழக்கு-பாழ்நிலச் சட்டங்களின்படி முடிக்னெத்தீர்க்கப்பட்ட கலுகசாறேகேன; தெற்கு-முடியால் உருத்தாடும் கலுகசாறேகேன; மேற்கு-வழிப்பாதை.

XIV.—பிரதம படம் 381.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 90 | கலுகசாறேகேன | 0 3 20 |
| 90*a* | ஷை | 0 1 23 |
| 90*d* | ஷை | 0 0 32 |
| | | 1 1 35 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உருத்தாடும் கலுகசாறேகேன; கிழக்கு-குடாகலாற கிராம எல்லை, முடியால் உருத்தாடும் செருககாகேன; தெற்கும் மேற்கும்-முடியால் உருத்தாடும் கலுகசாறேகேன.

[Hambantota S. O. 28—1912.]

---

[Matara Notice No. 4,450.]

இதன்பின் சொல்லப்படும் காணிக்கு ஏதும் உரிதுடையோர்கள் யாருமிருப்பாராகில், அவர்கள், 1912 ம் வருஷம் (ஜூன்) ஆனிமீ 28 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்துத் தவணைக்குள்ளியாய் மாத்துறை கச்சேரியில்வைத்து மாத்துறை பகுதி உதவி அரசாட்சி ஏஜென்றுதுரை அவர்கள் முகதாவில் வெளிப்பட்டு குறித்த காணிக்கு அல்லது அதில் ஏதுமொன்றுக்கு உருத்துகாமிக்காவிட்டால், குறித்த உதவி அரசாட்சி ஏஜென்றுதுரை அவர்களுக்கு 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் உருத்துச் சொல்லப்படாத குறித்த காணியை முடிக்குரிய ஆதனமெனத் தனது கையொப்பம்விட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார்கள்.

ஏ. சீ. ஓல்னட்,
உதவி அரசாட்சி ஏஜன்று.

---

சுட்டிய காணியின் விவரம்.

தென் மாகாணம் மாத்தற திஸ்திருக்கு மொறவக்கோறளையைச்சேர்ந்த அம்பலுகல யென்னும் கிராமத்திலிருக்கும் 1 ரூட் 3 பர்ச்சஸ் விசாலமுள்ளதாய் 38 ம் நிம்பர் பிரதம பட்டத்தில் 2o வாய் காணும் காணித்துண்டுக்கு எல்லைகளாவன: வடக்கு-கற்ருடிகெதெறவத்தையும் எல். அப்பும் மற்றவர்களும் உருத்தாடும் பறகஹகொறடுவ, எச். சந்திரிஸ்சும் மற்றவர்களும் உருத்தாடும் கடுவனகெதெறவத்த; கிழக்கு-எச். சந்திரிசும் மற்றவர்களும் உருத்தாடும் கற்ருடிகெதெறவத்த, கடுவனகெதெறவத்த; தெற்கு-எச். சந்திரிசும் மற்றவர்களும் உரித்தாடும் கற்ருடிகெதறவத்த, கடுவனகெதறவத்த; மேற்கு-எல். அப்பும் மற்றவர்களும் உருத்தாடும் பறகஹகொறடுவ, எல். அப்பு உருத்தாடும் உனகஹவியத்த.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 588 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[Tenders for provisioning Kanatta Infectious Diseases Hospital.]

பின்னுல் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுப்பத்திரிக்கு கொந்திருத்து ஏற்றுக்கொள்ளப்படும் திகதி தொடக்கம் 1913 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டு சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத் தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "கணத்தை ஆசுப்பத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1912 ம் ஹூ ஆடிமீ 16 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினுல் கேள்வி சரீயீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினுல், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படிக் கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்கவொலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்படமாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) எவ். ஜி. மோர்வி,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1912 ம் ஆண்டு ஆனிமீ 26 ந் உ.

அட்டவணை.

| இடம். | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை. | பணப்பிணையின் தொகை. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| கணத்தை தொற்றுநோய் ஆஸ்பத்திரி .. | சமைத்த சாப்பாடு பாலில்லாமல் .. | 250 .. | 500 |

---

[Tenders for repairing the Salt Stores Nos. 17, 18, 20, and 22, Southern Depot, Puttalam.]

புத்தளம் தென் டிப்போவின் 17, 18, 20, 22, ம் நம்பர் உப்புக்குதங்களைப் பழுதுபார்க்க" வென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசென்றுத்துரை யவர்களால் 1912 ம் ஆண்டு ஆடிமாதம் 3 ந்திகதி 1 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரம்.

உப்புக்குதத்தின் கூரையின் மேல் கட்டிடத்தை எடுத்து உபயோகிக்கக்கூடிய மரங்கள்போட்டு திரும்பகட்ட வேண்டும்.

கூரைகள் ஆறு அங்குலத் தூரத்துக்கு இடைவிட்டு கிடுகினால் வேய வேண்டும்.

உழுத்ததும் பழுதானதுமான மரங்களையும் கிடுகுகளையும் எடுத்துப்போட்டு புதிய கிடுகுகளும் பெலத்த மரமும் போடப்பட வேண்டும்.

புதியதும் நேரானதுமான பூட்டுகள் கூரைக்குமேல் பதினெட்டிஞ்சி தூரத்துக்கு இடைவிட்டு பாரத்துக்கு போடப்பட வேண்டும்.

சுவரின் மோதல்களை பழுதுபார்க்க வேண்டும். நாலு சுவருக்கும் கிடுகினால் வேலியடைத்து தேள்வையான இடங்களில் தம்மனைசராய் நாட்ட வேண்டும்.

நிறுவைமண்டபங்களும் பழுபார்க்க வேண்டும்.

ஒவ்வொரு குதத்தின் முகட்டுவேலிகளுக்கு இரண்டு தம்மன கப்புகள் உதைகால்களாக கொடுக்க வேண்டும்.

கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டிய ஏற்பாடுகள்.

1. கேள்விக்காரர் 1912 ம் ஆண்டு ஆடிமீ 2 ந் திகதியிலன்று அல்லது அதற்குமுன் புத்தளம் கச்சேரியில் ரூபாய் 10 கட்ட வேண்டும். உதவி அரசாட்சி ஏசென்றுத்துரையால் நியமிக்கும் நியாயமான காலத்துக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் அரசாட்சிக்குப் பறிமுதலாக்கப்படும்.

2. அறிவித்தல் அல்லது கடிதங்களை பெற்றுக்கொள்ளுகிறதற்காக கேள்விக்காரர் புத்தளத்தில் ஓரிட விலாசம் கொடுக்கவேண்டும்.

3. வேலை நடத்த முற்பணம் கொடுக்கப்பட மாட்டா.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டதென் றறிவித்தல் கிடைத்ததின்பின் ஒரு கிழமைக்குள் இந்த வேலையைச்செய்து முடிக்க வேண்டும்.

5. இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரங்களை புத்தளம் உப்புத்துரை யவர்களிடம் விணவி அறிந்து கொள்ளலாம்.

யே. கொன்ரேய்,
உதவி அரசாட்சி ஏசன்று.

புத்தளம் கச்சேரி,
1912 ம் வருடு ஆனிமீ 15 ந் உ.

[Hoof and Mouth Disease, Wellassa, Badulla District.]

ஊவா மாகாணத்து வதுளை வருமான இறைக்குறிச்சியிலிருக்கும் பிரதான தலைமைக்காரனுடைய பிரிவாகிய வெல்லசயின் வேகம்பத்துக் கோறளையில் மாடுகளுக்கு வாய்நோய் குழம்புநோய் கண்டிருப்பதால், பின்னால் காட்டப்படுகிற எல்லைகளுக்குட்பட்ட மேற்சொல்லிய கோறளையை 1909 ம் ஆண்டு 25 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 5 ம் பிரிவின் படி நோய்கண்ட இடமென்று இத்தால் விளம்பரப்படுத்தப்படுகின்றது.

வேகம்பத்துக் கோறளையின் எல்லைகள் : வடக்கு-மதுற ஓயாவும் டியதுலக ஓயாவும்; தெற்கு-கலஓயாவும் கொடகலகந்தையும், தீபவெல்லவும் வன்வமடகந்துறையும்; கிழக்கு-கோமிரிதெனகந்துறயும், மல்பலகந்துறயும் றேறுககந்தறவும், பல்மதலே ஓயாவும்; மேற்கு-தோறபொடகந்தையும், தெகிகலகந்தையும், கிக்கிலிககந்துறயும், பேற்றுறகந்தையும்.

இந்தப் பிரசித்தம் 1912 ம் ஆண்டு ஆனிமீ 18 ந் திகதி தொடக்கம் சம்பவிக்கும்.

சீ. எல். விக்கிரமசிங்க,
ஊவா மாகாணத்து ஏசென்டருக்காக.

வதுளைக் கச்சேரி,
1912 ம் ஆண்டு ஆனிமீ 18 ந் திகதி.

---

[Supreme Court Criminal Sessions for Batticaloa at Jaffna.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: யாட்பாண நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் மட்டக்களப்பு டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1912 ம் ஆண்டு ஆடிமாதம் 8 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
றீ. சின்னத்தம்பி,
கீழ்மாகாணம் பிஸ்காலுக்காக.

பிஸ்கால் கந்தோர்,
1912 ம் வருடு ஆனிமீ 22 ந் உ.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.